## எதிர்க்கட்சித் தலைவர் கேட்கிறார்!

# சட்டமன்றத்தில் சட்டம் ஒழுங்கு முதலமைச்சரைக் காணோம்!

“சட்டசபையில் அப்பாவை காணோம்” என்றீர்கள்… இன்று “சட்ட ஒழுங்கு அமைச்சரை காணோம்”

தமிழ்நாட்டின் சட்ட ஒழுங்கு தீர்வுகளும், ஆளும் தலைமையின் பொறுப்பற்ற தன்மையும்

“சட்டசபையில் அப்பாவை காணோம்” என்று சில மாதங்களுக்கு முன்பு எதிர்க்கட்சிகளை பார்து நக்கலாக பேசினீர்களே முதல்வர் அவர்களே!!!

இன்று சட்டமன்றத்தில் மிக முக்கியமான “சட்ட ஒழுங்கு” துறை குறித்த விவாதம் நடைபெறுகிறது என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த துறையின் அமைச்சரும், மாநிலத்தின் முதல்வருமான நீங்களே இன்று சட்டசபையில் காணவில்லை.

அப்போ கேட்டீர்கள் “அப்பாவை காணோம்”. இன்று மக்கள் கேட்கிறார்கள் “சட்ட ஒழுங்கை காக்க வேண்டியவரை காணோம்”.

பேச்சுக்கு பதில் சொல்ல பயமா? கேள்விகளுக்கு பதில் தர முடியாதா? இல்லை பொறுப்பை தட்டி கழிக்கிறீர்களா?

தமிழ்நாட்டின் எதிர்கட்சித் தலைவரும், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமுமான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் ஆளும் விஜய்அரசை பார்த்து அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி வருகிறார்.

போதை, சட்ட ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பு என ஒவ்வொரு துறையாக புள்ளி விவரத்துடன் கேள்வி கேட்டு முதலமைச்சரையும் அமைச்சர்களையும் திக்கு முக்காட வைக்கிறார்.

மக்களின் குரலாக ஒலிக்கும் அவரின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் ஆளுங்கட்சி திணறி வருகிறது. உதயநிதி அவர்களின் ஆக்ரோஷமான எதிர்கட்சி பணி தமிழ்நாட்டு மக்களின் பாராட்டை பெற்று வருகிறது.

கடந்த கால திமுக ஆட்சியை குறை சொல்ல எந்த வித அருகதையும் அற்றவர்கள்

5 ஆண்டுகள் திமுக ஆட்சியில் - முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதல்வராக இருந்தபோது எடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கைகள்

**1. Supply Control**

- 107 டன்+ கஞ்சா பறிமுதல்: 2021 முதல் 2025 வரை 107 டன்களுக்கு மேல் கஞ்சா பிடிக்கப்பட்டுள்ளது
- 8,949 வங்கி கணக்குகள் முடக்கம்: போதை கடத்தல் தொடர்பான 8,949 வங்கி கணக்குகள் முடக்கப்பட்டன
- 45 சொத்துகள் பறிமுதல்: 21 கோடி மதிப்புள்ள 45 சொத்துகள் பறிக்கப்பட்டன.

**2. தடுப்பு & விழிப்புணர்வு**

- ‘எனக்கு வேண்டாம், நமக்கு வேண்டாம்’ இயக்கம்: 74 லட்சம் மாணவர்கள் போதைக்கு எதிராக உறுதிமொழி

**3. தண்டனை & தடுப்புக் காவல்**

- குற்றத்தீர்ப்பு 88%: 2025 ஜீன் வரை 4,889 வழக்குகளில் 3,493 குற்றத்தீர்ப்பு
- குண்டர் சட்டம்: ஆயிரக்கணக்கான பழக்கமான கஞ்சா விற்பவர்கள் குண்டர் சட்டத்தில் கைது
- தமிழ்நாட்டின் சட்ட ஒழுங்கு இன்று எந்த நிலையில்?

1. போதை மற்றும் கஞ்சா மாஃபியா
   பள்ளி, கல்லூரி வாசலிலேயே கஞ்சா பொட்டலம் விற்கப்படுகிறது.
2. பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு கேள்விக்குறி
   பாலியல் வன்கொடுமை, கடத்தல் அதிகரித்துள்ளது.
3. கொலை, கொள்ளை, வழிப்பறி
   பட்டப்பகலில் செயின் பறிப்பு சர்வ சாதாரணம்.



**சைதை சாதிக்**
(கழக செய்தித் தொடர்பாளர்)

4. அரசியல் வன்முறை
   கட்சி பெயரை சொல்லி மிரட்டுவது அதிகமாகிவிட்டது.
5. சைபர் குற்றம் மற்றும் நிதி மோசடி
   முதியவர்கள், பெண்கள் லட்சக்கணக்கில் ஏமாற்றப்படுகிறார்கள்.

முதல்வர் அவர்களே, எதிர்க்கட்சியை கிண்டல் செய்வது அரசியல். ஆனால் மக்கள் கொடுத்த பொறுப்பில் இருந்து ஓடி ஒளிவது அல்ல.

“சட்டசபையில் அப்பாவை காணோம்” என்று நீங்கள் கேட்டீர்கள்.

இன்று தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள் “சட்ட ஒழுங்கை காக்க வேண்டிய முதல்வரை காணோம்”.

பேச்சு வீரம் மட்டும் போதாது. பொறுப்புடன் சபையில் அமர்ந்து பதில் சொல்லுங்கள்.

இல்லையென்றால் நாளை “தமிழ்நாட்டில் சட்டமே இல்லை” என்ற நிலை வந்துவிடும்.

ஆட்சி என்பது நாற்காலி அல்ல, அது பொறுப்பு.

# தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலும்-கலைஞர் எழுப்பிய மாநிலச் சுயாட்சி முழக்கமும்!

“நான் சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும்! என் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்! என்று பாடினார் ஈழத்துக் கவி பண்டிதர் சச்சிதானந்தன்.

‘வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்!’ என்று கூறித் தமிழ் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருந்தவர் தண்டமிழாசான் கலைஞர்.

ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற ஜோசப் விஜய் உள்ளிட்ட அமைச்சர்கள் பதவி ஏற்பு விழாவில் ‘வந்தே மாதரம்’, ‘தேசியக் கீதம்’, ‘தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்’ எனக் கடைசியில் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு மொழி வாழ்த்துப் பாடல் அவமதிக்கப் பட்ட அவல நிலைக்குள்ளானது. ஆளுநர் உரை நிகழ்ச்சியின்போதும் முன்னர் தொடர்ந்து வந்த நடைமுறையை மாற்றி அவமதிக்கும் வகையில்; இறுதியில்தான் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் இசைக்கப்பட்டது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக நிகழ்ச்சியிலும் தமிழ்த்தாய் தொடர்ந்து அவமதிக்கப்பட்டாள்.

ஜோசப் விஜய் தலைமையில் நடந்து வரும் த.வெ.க. ஆட்சியில்தான் மொழி வாழ்த்துக்கு எதிராக இத்துணைக் கொடுமைகள் அரங்கேறித் தொடர்கின்றன. இப்போது தீர்மானம் கொண்டு வந்து அரசியல் கபட நாடகம் ஆடியுள்ளார்?. யாரை ஏமாற்ற இந்த அரிச்சந்திர நாடக வேடம்?

தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலுக்கு எதிராக ஆளுநர் மாளிகை நடந்து கொண்டதற்கு வாய் திறந்து ஒரு கேள்வியும் எழுப்பாத ஜோசப் விஜய்; இப்போது யாரை ஏமாற்றத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடத் தீர்மானம் கொண்டு வந்தார்? தமிழ்த் துரோகிகளால் ஒட்டு மொத்த தமிழர்கள் நெஞ்சில் இரத்தம் வழிகிறது.

மாறாக, கழக ஆட்சியின் தமிழ்ப் பணிகளையும், தலைவர்களான பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தளபதி மு.க. ஸ்டாலின் ஆகியோர் பங்காற்றிய தமிழ்த் தொண்டுகளையும் கொச்சைப்படுத்தும் விதத்தில்; தமிழ்நாடு சட்டமன்றத்தில் உள்ளேயும், வெளியேயும் தற்குறிக் கூட்டத்தார் இலாவணிக் கச்சேரி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**“தேமதுரத் தமிழோசை தெருவெலாம் கேட்க வேண்டும்” என்று வேட்கை கொண்டு பாடினான் விடுதலைக்கவி பாரதி! ஆனால் இன்று, தமிழ்நாடு சட்டமன்றத்தில் த.வெ.க.கட்சித் தலைவரான தமிழ்நாடு முதல்வர் ஜோசப் விஜய் தொடங்கி அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட அவர்கள் பேசும் “கொத்துப் புரோட்டா மொழி” கேட்டுத் தமிழ்த்தாயே வெட்கி, நாணித் தலை குனிகிறாள்! எந்தச் சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா வாலும், முத்தமிழறிஞர் கலைஞராலும் பல சான்றோர், ஆன்றோர் பெருமக்களாலும் கொஞ்சி விளையாடிக் குதூகலித்துக் கோட்டையைக் கட்டியாண்ட குவலயத் தமிழ்; தென்னவர், மன்னவர் என மூவேந்தர்கள் முழங்கிய முதுமொழிப் பொதிகைமலைத் தமிழ்.....? இன்று தற்குறிகளால் தவளைவாய் சத்தம் போல், சிதைத்துச் சின்னாப் பின்னமாக்கப்படுகிறது. இது அறிந்த குவலயத் தமிழ் மக்கள் யாவரும்; குலை நடுங்கியவர்களாய்த் தாய் மொழி தமிழைக் காப்பாற்ற இதயம் ஏங்கி நிற்கிறார்கள்!**

**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்



‘சிறந்த தமிழ் படம் சிறந்த தமிழ்ப் பட இயக்குநர், சிறந்த நடிகர், சிறந்த எழுத்தாளர், பாடல் ஆசிரியர்: என்று பன்முகத் திறமைகளில் திரைப்படத் துறையில் சிறந்து விளங்குகின்ற அவர்களைத் தேர்ந்தெடுத்து தமிழக அரசின் சார்பில் பரிசுகள் வழங்கும் விழா நிகழ்ச்சியைப் பேரறிஞர் அண்ணா அவர்கள்தாம் உருவாக்கினார்கள். அண்ணாவின் மறைவுக்குப் பின் கலைஞர் முதலமைச்சரானார். 1970 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் திரைப்படக் கலைஞர்களுக்கான விழாவில், ஓர் அறிவிப்பை வெளியிட்டார். “இனித் தமிழக அரசு நிகழ்ச்சிகளில் தொடக்கத்தில் இறைவணக்கம் என்பது தமிழ்த்தாய் வாழ்த்தாக இருக்கும்’ என்றும், “நீராரும் கடலுடுத்த” எனும் மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய அந்தப் பாடலே அந்த வாழ்த்தாக அமையும்’ என்றும் கலைஞர் அவர்கள் அறிவித்தார். அந்த வாழ்த்துப் பாடலுக்கு ஏற்றவாறு பாட்டை ஓரளவு குறைத்தார். மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதிய அந்தப் பாடலில் அமைந்திருந்த சமஸ்கிருத மொழி உலக வழக்கு ஒழிந்த மொழி என்பதை; “ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து, ஒழிந்து சிதையா உன் சீரிளமைத் திறன் வியந்து” என்று குறித்துத் தமிழ் மொழியைப் புகழ்ந்து இருந்ததைச் சற்று மாற்றினார்.

அரசு நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்தில் மற்றொரு மொழியை குறைத்தும் பழித்தும் கூறுதல் வேண்டா என்பதை அழிந்து, ஒழிந்து என்று சொற்களை ஒரு பகுதியினர் அமங்கலச் சொற்கள் எனக் கருதி முகம் சுழிப்பர் என்பதற்காகவும்; அந்த வரியை அகற்றி விட்டு இசையமைக்குமாறு கேட்டுக் கொண்டார். அவ்வாறே இசைக்கு ஏற்ப பாடல் ஒழுங்குப்படுத்தப் பட்டது. மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் இசையமைக்கப் பின்னணி இசைப் புகழ் மணிகள் டி.எம். சௌந்தரராஜன், பி. சுசீலா ஆகியோர் பாடி அந்த வாழ்த்துப்பாடல் இசைத்தட்டுகளாகவும் வெளியிடப்பட்டன. அது தமிழக அரசு விழாக்களில் பயன்படுத்தப்பட்டு வந்தன.

அவ்வாறு “தமிழ்த்தாய் வாழ்த்து” என அறிவித்தவுடன் எதிர்ப்புகள் சிலரிடமிருந்து கிளம்பின. ‘ஆனந்த விகடன்’ இதழில், “தமிழ்த்தாய் ஒரு குட்டித் தேவதை” என்றும், ‘மொழி வாழ்த்துப் பாடலைக் கடவுள் வாழ்த்துப் பாடலாக மாற்றியது பொருத்தமற்றது’ என்றும், அந்த இதழில் பிரபல எழுத்தாளர் கி.வா.ஜெகநாதன் எழுதியிருந்தார். அதற்குப் பதிலாக அங்கிங்கெனாதபடி” எனத் தொடங்கும் தாயுமானவர் பாடலை வைக்கலாம் என்று குறிப்பிட்டு இருந்தார். அது போன்ற செய்தியை ஆங்கில ‘மெயில்’ (Mail) போன்ற வேறு சில ஏடுகளிலும் மறுப்பு தெரிவித்துக் கருத்துக்கள் வெளி வந்தன.

அப்போது பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் தமிழ்நாடு அரசு எடுத்த முடிவை வரவேற்றும், எதிர்க் கருத்தாளர்களுக்குத் தக்கப் பதிலாகவும் அறிக்கை ஒன்றைக் கொடுத்தார். “தமிழினத்தின் கடவுள் வணக்கப் பாடல்கள் பேராசிரியர் சுந்தரனாரின் மனோன்மணியம் வணக்கப் பாடலைப் பாட வேண்டும் என்று தமிழகப் புலவர் குழு தீர்மானமாகப் பல ஆண்டுகளுக்கு முன்பே கொண்டு வந்தது. அந்தப் பாடல் சமஸ்கிருதத்தை விட தமிழுக்கு உயர்வு அளித்துள்ளது. ஆயினும், சமஸ்கிருதப் பற்றாளர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் போன்றோர் அந்தப் புலவர் குழுவில் இருந்து வெளியேறி விட்டார். தாயுமானவர் பாடலைப் பாடலாம் என்றும் அல்லது திருக்குறள் முதல் அதிகாரத்தில் உள்ள, ‘அகர முதல’ தொடங்கிப் பத்துக் குறட்பாக்களையும் பாடலாம் என்றும் அதன் பின் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அது இந்து மதத்தைப் பெரிதும் சார்ந்தது தாயுமானவர் பாடல்’ என்று பிற மதப் புலவர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

**திருக்குறள் முதல் அதிகாரத்தில் “தாள்”, “அடி” என்று கூறுவதால் உருவ வணக்கத்தின் சாயல் உடையது போல் அதுவும் இருக்கிறது என்று இஸ்லாமிய, கிறிஸ்துவப் புலவர்கள் சிலர் குறைபட்டனர். மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை இந்து மதத்தைக் கரைத்துக் குடித்தவர்; வேதாந்த ஆராய்ச்சியில், கடவுள் ஆராய்ச்சியில் கரை கண்டவர் என மிகச் சிலரே இருக்க முடியும். அத்தகையவர் இந்து மதத்தையோ, வேறு எந்த மதத்தையோ புண்படுத்தாமல், எல்லா மதத்தினரும் ஒப்புக்கொள்ளும் விதத்தில் தமிழ் மொழி உருவாகவே பாடிய தேசியக் கடவுள் பாடல் தான் “நீராரும் கடலுடுத்த” எனும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாகும். அந்த வாழ்த்துப் பாடலைத் தமிழக முதல்வர் கலைஞர் தேர்ந்தெடுத்தார் என்றால்; அது அவரது கலைப் பண்புக்கும், தமிழன்புக்கும் சீரிய சான்றாகும்” என்று பன்மொழிப் புலவர் அப்பாதுரை விளக்கம் தந்தார்.**

அவரின் கருத்தினை ஒட்டியே சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும் அறிக்கை ஒன்றை விடுத்து எதிர்ப்புகளுக்குத் தகுந்தவாறு பதில் அளித்தார். ஆகவே, “நீராரும் கடலுடுத்த” என்று தொடங்கும் பாடல் அரசு விழாக்களிலும் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளும் பாடப்பட வேண்டும் என்று கலைஞர் கொடுத்த அறிவிப்பு தமிழ்மொழி பற்றுடைய அனைவருக்கும் கரும்பாக இனித்தது. ஏனோ, ‘ஆனந்த விகட’னுக்கு மட்டும் வேம்பாக கசக்கிறது; அரசு விழாக்களில் தமிழைத் தெய்வமாக வழிபடுவோம்!” எனக் கலைஞர் கூறியிருக்கிறார்.

மொழியை தெய்வமாக வழிபடுவது பிழையெனில், அந்தப் பிழையை முதலில் செய்த பெருமை வடமொழியாளருக்கே உரிமை!. மொழி வாழ்த்தையே கடவுள் வாழ்த்தாகப் பாடுவது பொருத்தமற்றது என்கிறார் கி.வா.ஜ.! “ஓம்” என்ற எழுத்து வடிவம் தான் ஒலி வடிவமாக இறைவடிவமாக பிரணவ மந்திரமாக வழிபடப் பாடப்படுகிறது என்பதை மறந்துவிட்டார் போலும்” என்று கடுமையாக கருத்துகளை எடுத்து வைத்தார் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவரைத் தொடர்ந்து தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் “நாடும், மொழியும் ஒருங்கே போற்றப்படும் சிறப்புக்குரிய அந்தப் பாடல் தமிழக மக்கள் ஏற்கத் தக்கதான வாழ்த்துப் பாடல்” என விளக்கமாக அறிவித்தார்.

**இப்படியெல்லாம் எதிர்ப்புகள் பலத் தாங்கித் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழக அரசு நிகழ்ச்சியில் பாடப்படும் போது, அந்தப் பாடல் எத்துணை எதிர்ப்புகளைச் சமாளித்து வெளிவந்துள்ளது என்று கடந்த காலச் சரித்திரம் பலருக்குத் தெரியாமல் கூட இருக்கலாம்;” என்று பலமுறை நினைவூட்டி கலைஞர் தாம் எழுதிய நூல்களிலும் மட்டுமல்ல; அவர் பங்கேற்ற பல்வேறு விழாக்களிலும்; அரசு, தனியார் நிகழ்ச்சிகளிலும் இது பற்றிப் பேசியும் வந்திருக்கிறார்.**

***தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ மொழி வாழ்த்துப் பாடலாக ஆக்கி அரசு நிகழ்ச்சிகளில் கட்டாயமாகப் பாட முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்தார். அரசு ஆணை எண்: 1393. தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை. (நாள் 17.06.1970)**

பா.ஜ. கட்சியைச் சேர்ந்த ஹெச். இராஜா ஏற்பாடு செய்திருந்த ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்த சங்கராச்சாரி விஜயேந்திரர், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுக்கு எழுந்து நின்று மரியாதை தராமல், உட்கார்ந்தபடியே கண்ணை மூடிக்கொண்டு அவமதித்த காரணத்தால்; அதற்குத் தனியாக ஓர் அரசாணை ஒன்றைப் பிறப்பித்தார் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வராக இருந்த மு.க. ஸ்டாலின். அரசாணை எண்: 272 .தமிழ்ப் பண்பாட்டுத்துறை. (நாள்: 17.12.2021)

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளில் ‘தமிழ்த்தாய் வாழ்த்து’ கட்டாயம் முதலில் பாடப்பட வேண்டும் என கடந்த தி.மு.கழக ஆட்சியில் 17.12.2021 ஆம் ஆண்டு அரசாணை (நிலை எண். 1037) வெளியிடப்பட்டது.

இப்போது இந்தத் தீர்மானம் யாரை ஏமாற்ற?

“சட்டமன்றத்தில் கொண்டு வரப்படுகிற தீர்மானத்தால் எந்தப் பயனும் இல்லை; அதற்குச் சட்டபூர்வமான மசோதா கொண்டு வரப்பட வேண்டும்” என்று தி.மு.க.வின் சார்பில் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான இரகுபதி கோரிக்கை வைத்தார். திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்களும், தீர்மானத்திற்குப் பதிலாகச் சட்டம் இயற்றி, அதை மீறுபவர்களுக்குத் தண்டனை வழங்கும் விதியும் சேர்த்தால், அது வலுவாக அமையும்” என்று தான் விடுத்த அறிக்கையின் மூலம் கூறினார்.

**தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைக் கட்டாயமாக்க தனிச் சட்டம் இயற்ற வேண்டும். வெறும் தீர்மானம் கட்டுப்படுத்தாது. சட்டமன்றத்தில் ஏற்படுத்தப்படும் தீர்மானம் (Resolution) அல்லது (G.O) அரசாணை என்பது ஒரு கொள்கை முடிவு. ஒன்றிய அரசுப் பதவியிலுள்ள அதிகாரிகளை அது கட்டுப்படுத்தாது. மத்திய அரசை ஒன்றிய அரசு என்று உச்சரிக்கவே தற்போதுள்ள ஜோசப் விஜய் அரசு அஞ்சுகிறது. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் ஏன் சட்டப் பூர்வமாகக் கொண்டு வர வேண்டுமென்றால்; மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்படும் அபாயம் ஏற்படும். ஒன்றிய அரசு உள்துறை ஜீலை 9 ஆம் தேதி 2026 விழாக்களில் தொடக்கத்தில் வந்தே மாதரம் பாடலைப் பாட அவதானிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.**

அண்மையில் ஆளுநர் பங்கேற்ற பல்கலைக்கழக விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பின்னுக்குத் தள்ளப்பட்டது. அதைப் பற்றி இந்தத் தற்குறி அரசாங்கம் எதிர்த்து எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. ஆகவே, நிலைத்த தன்மையுடையதாக (Statutory Status) சட்ட அங்கீகாரம் பெற்றுவிட்டால் யாராலும் அதை எளிதில் மீற முடியாது. ஆசிரியர் கி.வீரமணி சொல்வது போல் சட்ட விதிகள் மீறுபவர்களுக்குத் தண்டனை வழங்க முடியும். யாரையும் கெஞ்ச வேண்டிய அவசியமும் இருக்காது. ஏன் இந்தப் பொம்மை அரசு அதுபோன்ற சட்ட முன்வடிவைத் தாக்கல் செய்ய முன்வரவில்லை?

கலைஞர் போட்ட ஆணையின் அடிப்படையில், அதிகாரப் பூர்வ மங்கலப் பாடலாக (State Song) சட்டபூர்வமாக உன்னத அங்கீகாரத்தை வரைமுறையை மு.க. ஸ்டாலின் அரசாணை வழங்கினார்.

அத்துடன் மாநிலச் சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தி நீதிபதி ராஜமன்னார் குழு பரிந்துரைகளை பெற்று சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டவர்தான் கலைஞர். அதனை பிரதமர் இந்திரா காந்திக்கு அனுப்பி வைத்து வலியுறுத்தி வந்தார்.

1970ஆம் ஆண்டு தமிழகத்திற்கென்று தனிக் கொடி வேண்டும் என்று பிரதமர் இந்திராவிடம் முதல்வராக இருந்த கலைஞர் அதிகாரப்பூர்வமாகக் கோரிக்கை வைத்தார். மாநிலப் பாடலாகத் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் மட்டுமே இருந்ததால்; தனிக்கொடி கேட்டுக் கொடியின் வடிவம் என அவர் தந்த வரைபடத்தில் இடப்புற மூலையில் மூவண்ண நிறத்திலான இந்தியத் தேசியக் கொடியும், மீதமுள்ள பகுதியில் தமிழக அரசின் முத்திரையான சிறீவில்லிபுத்தூர் கோபுரச் சின்னமும் இடம்பெற்று இருந்தது. உலக மாகாணங்களில் மாநிலங்களுக்கென்று தனிக்கொடி இருப்பது போல, இந்தியாவிலும் மாநிலங்களுக்கு உரிமை வேண்டும் என்று மாநில சுயாட்சிக் கொள்கையை நிலைநாட்டினார். “இப்படி நாங்கள் கேட்பது பிரிவினையாகாது; ஒருமைப்பாட்டுக்குள் மாநிலச் சுயாட்சியை நிலைநாட்டுவது இதன் நோக்கமாகும்” எனச் சட்டமன்றத்தில் விளக்கம் தெரிவித்தார்.

இந்திரா காந்தி மற்ற மாநில முதல்வர்களுடன் கலந்தாலோசனை செய்து முடிவு எடுப்பதாகக் கூறினார். ஆனால், அப்படி ஒரு முடிவுக்கு ஒருமித்த கருத்து ஏதும் ஏற்படாமல் போயிற்று. இந்நிலையில் குடியரசுத் தினம், சுதந்திர தினம் ஆகிய இரு நாட்களில் ஆளுநர் கொடியேற்றுவதை மாற்றி மாநில முதல்வ ர்களுக்கு வாய்ப்புத் தரும் விதத்தில்; சுதந்திர தினத்தன்று டெல்லியைப் போலவே, கொடியேற்றும் உரிமை கேட்டு 1974 பிப்ரவரி மாதத்தில் பிரதமர் இந்திராவுக்கு முதல்வர் கலைஞர் கடிதம் எழுதினார். அவர் வலியுறுத்திய கோரிக்கை ஏற்கப்பட்டு 1974 ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று இந்திய மாநில முதல்வர்கள் கொடி ஏற்றலாம் என்கின்ற மாநில உரிமையைப் பெற்றுத் தந்த பொன்னேடுகளில் பொறிக்கப்பட்ட இந்திய வரலாற்றுக்கு உரியவர் கலைஞர் ஆவார். அந்நாள் முதல் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15 அன்று மாநில முதல்வர்கள் கொடியேற்றுவது என்கிற நிகழ்ச்சி இந்திய மாநிலங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழன் தனது அரிய கருவூலங்கள், அடையாளங்கள் பலவற்றை இழந்தும் ஓர் இனமாக அவ்வுலகில் வாழ்வதனின்றும், இழிந்து போகும் அவல நிலையை நம் தலைவர் கலைஞர் மீட்டுக் கொண்டுதான் இருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# அ. இரகுமான்கான்

**ஆகஸ்ட் 20 (2020)**



**மாணவப் பருவத்திலேயே தேர்தல் பிரச்சாரம் செய்ததோடு, 1965ஆம் ஆண்டு இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது, கல்லூரி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டைமீறி, போராட்டத்தில் ஈடுபட்டார்.**

**மதுரையில் கறுப்புக் கொடிப் போராட்டம் நடைபெற்றபோது, இவர்மீது அ.தி.மு.க. அரசால் பொய்வழக்குப் போடப்பட்டு, இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.**

**கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கு கொண்டு வேலூர், திருச்சி சிறைகளில் இருந்த இவர், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று, அவருடன் சென்னை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**1977ல் தொடங்கி ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 1996ல் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும் – 2006ல் தமிழக அரசின் சிறுசேமிப்புக் குழுத் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.**

**கழகத்தின் அமைப்புச் செயலாளர், தணிக்கைக்குழு உறுப்பினர், தீர்மானக்குழுச் செயலாளர், செய்தித் தொடர்பாளர் ஆகிய பொறுப்புக்களை ஏற்று கழகப் பணியாற்றிய இவருக்கு, 2012ல் தலைமைக் கழகத்தின் சார்பில் ‘அண்ணா விருதினை’ முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## நியாயவிலைக் கடைகளில் கைரேகைப் பதிவில் குளறுபடி!

*சேலம், ஆக.20-*

*த.வெ.க. ஆட்சியில் பொது மக்கள் ரேஷன் பொருட்கள் வாங்க முடியாமல் திணறல்.*

*சேலம் மாவட்டத்தில் 1700-க்கும் மேற்பட்ட ரேஷன் கடைகள்உள்ளன. இங்கு பயோமெட்ரிக் மிஷின் மூலம் ஸ்மார்ட் கார்டு ஸ்கேன் செய்து விரல் ரேகை பதிவு செய்த பின்பு அரிசி பருப்பு சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.*

*கடந்த சில நாட்களாக அடிக்கடி ஏற்படும் சர்வர் பிரச்சினையால் கடைக்கு வரும் பொது மக்களிடம் நீண்ட நேரம் காத்திருந்தவர்களை பொருட்கள் வழங்காமல் திருப்பி அனுப்பிவரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.*

*இதனால் இந்த ரேஷன் பொருட்களை அரிசி பருப்பு சர்க்கரை போன்ற பொருட்கள் நம்பி வாழ்கின்ற மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.*

*இது த.வெ.க. ஆட்சின் மாற்றம் விசிலுக்கு வாக்களித்து வெறும் வயிற்றில் வாழும் நிலை ஏற்பட்டு விட்டது.*